செ.வெ. எண்: 401 நாள்: 11.07.2012

**<u>மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறைஅமைச்சர் திரு. முக்கூர் என். சுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் ஆய்வு கூட்டம் 11.07.2012 அன்று நடைபெற்றது</u>**

எல்காட் உருவாக்கியுள்ள சிறப்பு பொருளாதார மண்டலங்களில் இடம் பெற்றுள்ள தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்களின் தற்போதைய நிலை குறித்து கேட்டறிந்து, மேலும் வளர்ச்சி பெறவும், உரிய நடவடிக்கைகள் எடுக்கவும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கவனத்திற்கு எடுத்துச் சென்று ஆவன செய்வதாக மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் 11.07.2012 அன்று தெரிவித்தார்கள். மேலும் தகவல் தொழில்நுட்ப நிறுவன பிரதிநிதிகளை அழைத்து விரைவில் தொழில் துவங்கி வணிகத்தை மேம்படுத்தவும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் தொழில்நுட்பம் பயின்ற மாணவர்களுக்கு வேலை வாய்ப்பை அதிகரிக்கவும் கேட்டுக் கொண்டார்.

மேலும் எல்காட் செயல்படுத்தி வரும் திட்டங்கள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது தகவல் தொழில்நுட்ப துறை செயலர் திரு எஸ்.கே.பிரபாகர், இ.ஆ.ப., எல்காட் மேலாண்மை இயக்குநர் திரு அதுல் ஆனந்த், இ.ஆ.ப., மற்றும் துறையைச் சார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**